# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2007 / 2008

## HELD IN AUGUST – 2008

## BBA / COM 37 II – TAXATION

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. (கணிப்பொறி பாவிக்கப்படலாம்)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) "நபர்" எனும் பதத்தினை விளக்குக

(05 புள்ளிகள்)

(ஆ) திரு வில்லியம் என்பவர் தனது வியாபாரம் குறித்து இலங்கைக்கு வந்து சென்ற நாட்களின் எண்ணிக்கை கீழே தரப்படுகிறது.

| வரவு | திரும்பல் |
|---|---|
| 10-05-2004 | 20-07-2004 |
| 10-08-2004 | 20-11-2004 |
| 20-01-2005 | 15-03-2005 |
| 15-04-2005 | 15-10-2006 |
| 29-01-2007 | 05-02-2007 |
| 15-03-2007 | 25-03-2007 |
| 20-12-2007 | 31-03-2008 |

வரை அவர் நாட்டை விட்டு வெளியேறவில்லை

பின்வரும் வரிமதிப்பாண்டு காலப்பகுதியில் திரு வில்லியம்ஸின் வதிவிடத்தைப் பற்றி ஆராய்க..

i. 2004/2005

ii. 2005/2006

iii. 2006/2007

iv. 2007/2008

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

02. திரு. சசியும், திரு.முரளியும் கடை ஒன்றினை பங்குடமை அடிப்படையில் நடத்துகின்றனர். பின்வரும் தகவல்களைக் கொண்டு பங்குதாரர் மத்தியில் பங்கிடக் கூடிய இலாபத்தையும், இலாப ஒதுக்கீட்டினையும் கணிப்பிடுக.

**திரு.சசி அன்ட முரளி திணைக்கள கடை**
**31.03.2007 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு**

| | | ரூபா. | | ரூபா. |
|---|---|---|---|---|
| திரு.சசிக்கு சம்பளம் | | 70,000 | மொத்த இலாபம் | 350,000 |
| திரு.முரளிக்கு செலத்திய வட்டி | | 30,000 | பற்று வட்டி | 110,000 |
| **மூலதன வட்டி:** | | | வட்டி வருமானம் | 25,000 |
| திரு. சகி | 10,000 | | | |
| திரு. முரளி | 10,000 | 20,000 | | |
| சம்பளமும் கூலியும் | | 95,000 | | |
| பொதுச்செலவுகள் | | 50,000 | | |
| தேறிய இலாபம் | | 120,000 | | |
| | | 385,000 | | 385,000 |

(20 புள்ளிகள்)

03. திரு. கோபால் என்பவர் வரையறுத்த 'டிமோ' கம்பனியின் பணிப்பாளர் ஆவார். அவரது ஊழிய வருமானங்களுடைய விபரங்கள் பின்வருமாறு.

| | ரூபா. |
|---|---|
| சம்பளம் | 750,000 |
| கொடுப்பனவுகள் | 100,000 |
| சம்பள நிலுவை (2001/2002) | 75,000 |
| பிள்ளையின் மருத்துவச் செலவு | 80,000 |
| ஊழியர் சேமலாப நிதிக்கான ஊழியர் பங்களிப்பு | 87,000 |
| உபகாரத் தொகை (2005/2006) | 80,000 |
| ஓய்வூதியம் | 380,000 |
| உழைக்கும் போதே செலுத்தும் வரி | (180,000) |
| வீட்டுக் கடன் மீள் செலுத்துகை | |
| முதல் | (145,000) |
| வட்டி | ( 55,000) |
| சேமலாப நிதி தொழில் கொள்வோரின் பங்களிப்பு | (117,000) |
| | 1055,000 |

மேலும் திரு.கோபாலுக்கு கொழும்பு – 03 இல் வீடு ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு மானகரசபை இந்த வீட்டினை 75,000/- (வீத வரி 30%) என மதிப்பிடப்பட்டுள்ளது. திரு. கோபால் கம்பனிக்கு ரூபா 6500/- மாதாந்த வாடகையாக செலுத்துகின்றார். கம்பனி வீட்டுச் சொந்தக்காரருக்கு ரூபா 118,000/- வருடாந்த வாடகையாக செலுத்துகின்றது.

திரு. கோபால் இரண்டு வீடுகளினை சொந்தமாக கொண்டுள்ளார். இதில் ஒன்று கொழும்பிலுள்ளது. மற்றயது கண்டியிலுள்ளது.

கொழும்பிலுள்ள வீடு மாதமொன்றிற்கு 24000/- படி வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த வீட்டின் தேறிய ஆண்டுப் பெறுமதி 150,000/- என கொழும்பு மாநகர சபை மதிப்பீடு செய்துள்ளது. வீத வரி 30%. இந்த வீடானது 4800,000/- செலவில் 01/10/2005 இல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டினுடைய தளப்பரப்பு 1450 சதுர அடிகளாகும்.

கண்டியிலுள்ள வீடு தளபாடங்களுடனான பங்களாவாகும். இவ்வீட்டினுடைய ஆண்டுப் பெறுமதி 120,000/- வாகும். (வீத வரி 30%) கோபால் பருவகாலங்களில் மாத்திரம் வருடத்தில் 3 மாதங்களுக்கு இந்த வீட்டில் குடியிருக்கின்றார். அதன் பின்னர் வீடானது ஒரு மாதத்திற்கு வெறுமனே விடப்படுகிறது. இந்தக் காலத்திற்குள் வீட்டுத் தளபாடங்கள், வீடு திருத்தச் செலவாக 6000/- செலுத்தப்படுகின்றது. வீட்டினை வாடகைக்கு விடுவதற்கான தரகு, விளம்பரச் செலவுகள் முறையே 3500/- , 4500/- ஆகும். இவ்வீடானது ஒரு மாதத்திற்கு 7500/- வீதம் 8 மாதங்களுக்கு வாடகைக்கு விடப்படுகிறது.

திரு.கோபால் XYZ கம்பனியிடமிருந்து பெற்ற பங்கிலாப விபரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| பெற்ற மொத்த பங்கிலாபம் | 70,000 |
| கழி: பிடித்து வைத்தல் வரி 15% | 10,500 |
| பெற்ற தேறிய வரி | 59,500 |
| | |
| பங்கிலாப முற்பண வரி | 18,900 |

திரு.கோபால் பின்வரும் வங்கிகளிலிருந்த வட்டி வருமானத்தினை மாதாந்தம் பெறுகிறார்.

| | |
|---|---|
| HNB மாதாந்தம் (மொத்தம்) | 5000 |
| Seylan மாதாந்தம் (மொத்தம்) | 2000 |
| | 7000 |

திரு.கோபால் பின்வருவனவற்றை கோருகிறார்.

- ஆயுள் காப்புறுதிக் கொள்கை ரூபா. 15,000
- அங்கீகரிக்கப்பட்ட தர்மஸ்தானத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடை ரூபா. 25,000
- கொள்கை கற்கைநெறி நிறுவனத்திற்கான நன்கொடை ரூபா. 25, 000.

மேற்கூறப்பட்ட தகவல்கள் திரு.கோபாலனுடைய வரி மதிப்பாண்டு 2006 / 2007 தொடர்பானவையாகும். திரு கோபால் செலுத்த வேண்டிய வருமான விரியினை வரிமதிப்பாண்டு 2006 / 2007 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்க.

(30 புள்ளிகள்)

04. வரையறுத்த 'டைமெக்ஸ் காமென்ஸ்' ஒருவிலை கூறப்பட்ட கம்பனி. இது ஏற்றுமதி சந்தை ஒன்றிற்கு ஆடைகளை உற்பத்தி செய்கிறன்து. இக்கம்பனியினால் செலுத்த வேண்டிய வருமான வரியை வரிமதிப்பு ஆண்டு 2006 / 2007 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடுக.

**31.03.2007 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு**

| | ரூபா. '000' | | ரூபா. '000' |
|---|---|---|---|
| சம்பளம் | 1,300 | மொத்த இலாபம் | 4,000 |
| சட்டச் செலவுகள் | 50 | லொறிவிற்பனை இலாபம் | 56 |
| மின்சாரம் | 100 | வாடகை தேறிய (NAV ரூபா. 75,000, வரிவீதம் 30%) | 250 |
| வாடகையும் வரியும் | 310 | பெற்ற வட்டி | 75 |
| மோட்டார் வாகனச் செலவு | 45 | | |
| விளம்பரம் | 50 | | |
| வட்டி | 100 | | |
| பொழுதுபோக்கு | 60 | | |
| கணக்காய்வுச் செலவு | 30 | | |
| நன்கொடை | 150 | | |
| பெறுமானத் தேய்வு | 540 | | |
| பிரயாணச் செலவுகள் | 152 | | |
| அலுவலக உபகரண விற்பனை நட்டம் | 15 | | |
| திருத்தச் செலவுகள் | 115 | | |
| ஏனைய செலவுகள் | 75 | | |
| தேறிய இலாபம் | 1,289 | | |
| | 4,381 | | 4,381 |
| வரிக்கான ஏற்பாடு | 250 | தேறிய இலாபம் | 1,289 |
| பணிப்பாளர் கட்டணம் | 325 | இலாப நட்டக் கணக்கு | 400 |
| கணக்காய்வுக் கட்டணம் | 225 | | |
| செலுத்திய பங்கிலாபம் | 300 | | |
| மீதி | 589 | | |
| | 1,689 | | 1,689 |

i. நிலையான சொத்துக்களின் விபரம்:

| கிரயம்(ரூபா) | காணி கட்டிடம் | மோட்டார் வாகனம் | அலுவலக உபகரணம் | தளபாடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01.04.2006 | 2640,000 | 1400,000 | 600,000 | 400,000 | 5040,000 |
| சேர்ப்பனவு | 800,000 | 900,000 | ------ | ------ | 1700,000 |
| விற்பனை | ------ | (640,000) | (100,000) | ------ | (740,000) |
| மீதி31.03.2007 | 3440,000 | 1660,000 | 500,000 | 400,000 | 6000,000 |
| பெறுமான தேய்வு ஏற்பாடு | | | | | |
| 01.04.2006 | 760,000 | 816,000 | 150,000 | 60,000 | 1786,000 |
| வருடத்திற்கான விதிப்பு | 215,000 | 280,000 | 30,000 | 15,000 | 540,000 |
| விற்கப்பட்டவை | ---- | (336,000) | (30,000) | ---- | (366,000) |
| மீதி 31.03.2007 | 975,000 | 760,000 | 150,000 | 75,000 | 1960,000 |

- நடப்பாண்டில் பண்டகசாலை கட்டிட வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பண்டகசாலை தளப்பரப்பு 1500 சதுர அடிகள் ஆகும்.
- ஜுலை 2003 இல் இருந்து வியபாரத்தில் பயன்படுத்தப்பட்ட லொறி நடப்பு ஆண்டில் விற்பனை செய்யப்பட்டது. 01.08.2006 பழைய லொறிக்குப் பதிலாக புதிய வேன் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. ஏனைய மோட்டார் வாகன மீதிகள் ஐந்து வருடத்திற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டனவையாகும்.
- 01.01.2003 இல் கொள்வனவு செய்யப்பட்ட சில காரியாலய உபகரணங்கள் வியபாரத்தில் பாவிக்க முடியாத நிலையிலுள்ளது. அவை வருட காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்டன. ஏனைய மீதிகள் கடந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

ii. சம்பளமானது களஞ்சியசாலையை கட்டியதற்காக பொறியியலாளருக்கு செலுத்திய ரூபா. 70,000 உள்ளடக்குகிறது.

iii. சட்டச் செலவுகளில் சட்டத்தை மீறியதற்காக செலுத்திய தண்டப்பணம் 15,000/- உள்ளடக்கப்பட்டது.

iv. 25% ஆன மின்சாரக் கட்டணம் முகாமையாளரின் வதிவிடத்திற்குரியது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

v. நன்கொடைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் :

| | |
|---|---|
| டாக்டர் ஆதர் சீ கிளாக் நிதியம் | 40,000 |
| பாதுகாப்பு அமைச்சு | 80,000 |
| வயோதிபர் இல்லம் | 30,000 |
| மொத்தம் | 150,000 |

(35 புள்ளிகள்)

*****